## மகளிர் உரிமை மாநாட்டின் எழிலார்ந்த காட்சிகள்!






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (14.10.2023) சென்னை. நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் நடைபெற்ற மகளிர் உரிமை மாநாட்டில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி, சோனியா காந்தி அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையினை நினைவுப் பரிசாக வழங்கினார். இதேபோன்று மாநாட்டில் பங்கேற்ற முன்னணி மகளிர் தலைவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையினை நினைவுப்பரிசாக வழங்கினார்.





மகளிர் உரிமை மாநாட்டில் திரண்ட மகளிர் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் – திருமதி சோனியா காந்தி – கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் பங்கேற்றக் காட்சி.



மகளிர் உரிமை மாநாட்டில் அரங்கமே கொள்ளாத அளவிற்கு பல்லாயிரக்கணக்கில் திரண்ட மகளிரை காணீர்.

## சென்னையில் மகளிர் உரிமை மாநாடு:

# பெண்களின் சக்திமிக்க குரல் ஓங்கி ஒலிக்கும்!

### மாநாட்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னோட்டமான அறிவிப்பு!

**சென்னை, அக்.16-**

**“சென்னையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டில் பெண்களின் சக்திமிக்க குரல் ஓங்கி ஒலிக்கும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டையொட்டி நேற்று முன்னோட்டமான அறிவிப்பினை தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான், அரசு வேலை வாய்ப்பிலும் உள்ளாட்சித் தேர்தலிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, ஆண்களுக்கு நிகராக பெண்களுக்குச் சொத்துரிமை உள்ளிட்டவற்றை தி.மு.க. ஆட்சியில் முதல்வராக இருந்து சட்ட மாக்கினார். தற்போது தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் வாயிலாக, “கலைஞர் மகளிர் உரிமை திட்டம்”, “பெண்களுக்கு கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம்”, “புதுமைப் பெண் திட்டம்”, “மகளிர் சுய உதவிக் குழுக்கள்”, “மகளிரை அர்ச்சகராக்கியது” என பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை அடுத்தடுத்துச் செயல்படுத்தி வருகிறார்.

எனவே, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை உடனே அமல்படுத்துவது உள்ளிட்ட பெண்ணுரிமை தொடர்பான கருத்துரையாடலை முன்னெடுப்பதை காலத்தின் தேவையாக கருதி தி.மு.க. மகளிர் அணி சார்பில் மகளிர் உரிமை மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தது. சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் இந்த பிரமாண்ட மாநாடு நேற்று மாலை நடைபெற்றது.

மாநாட்டிற்கு தி.மு.க. தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்தார். தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை வகித்தார். தி.மு.க. மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன் வரவேற்றுப் பேசினார். மாநாட்டில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சி செயல் தலைவர் சுப்ரியா சுலே, ஐக்கிய ஜனதா தளம் தேசிய நிர்வாக குழு உறுப்பினரும், அமைச்சருமான லெஷி சிங், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் சுபாஷினி அலி,

இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினரும், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான ஆனி ராஜா, ஆம் ஆத்மி கட்சி தேசிய நிர்வாக குழு உறுப்பினரும், டெல்லி சட்டப் பேரவை துணை தலைவருமான ராக்கி பிட்லன், திரிணாமுல் காங்கிரஸ் தேசிய செய்தி தொடர்பாளர் சுஷ்மிதா தேவ் உள்ளிட்ட இந்தியா கூட்டணியின் பல்வேறு முக்கிய அகில இந்திய பெண் தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். தி.மு.க. மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி நன்றி கூறினார்.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் நேற்று முன்தினம் இரவு விமானம் மூலம் சென்னை வந்தனர். அவர்களை சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் வரவேற்றனர்.

**5 ஆண்டுகளுக்குப் பிறகு சோனியாகாந்தி சென்னை வருகை!**

பின்னர் அங்கிருந்து அவர்கள் இரவு 10.50 மணியளவில் ஐ.டி.சி. கிராண்ட் சோழாவிற்கு சென்றனர். இரவு 2 பேரும் அங்கேயே தங்கினர். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சோனியாகாந்தி அவர்கள் சென்னை வருகை தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-

**மகளிர் மாநாட்டிற்கு வருகை தந்துள்ள திருமதி சோனியா காந்தி மற்றும் பிரியங்கா காந்தி ஆகியோரை வரவேற்றதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

**சென்னையில் நடைபெறும் பெண்கள் உரிமைகள் மாநாட்டில், நாடு முழு வதும் உள்ள மதிப்பிற்குரிய பெண் தலைவர்களின் சங்கமமும் நடைபெறவுள்ளது. இந்தியாவின் முன்னணி பெண்களின் சக்திவாய்ந்த குரல்கள் எழும்ப மாநாடு காத்திருக்கிறது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.